1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒன்பது மைல், இரண்டு பர்லாங் நீளமுள்ள அந்தச் சாலையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறை மூலம் அதைப் பேணி நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும்.

சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்கள்

*132. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முக்கிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்க்க அரசு ஆலோசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த நெடுஞ்சாலைகளில் இந்த மரம் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக விவரம் இல்லை.

The Government are considering a crash programme and have called for necessary details from the Chief Engineer Highways and Rural Works.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சில இடங்களில் சாலைகளிலே உள்ள மரங்களை சில ஆட்கள் வெட்டி எடுத்து-க்கொண்டு போய்விடுகிறார்கள். ரம்பத்தால் அறுத்து எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். சேலம் மாவட்டத்தில் ஓமலூர்--மேட்டூர் சாலையில் உள்ள மரங்களை அறுத்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மரங்களை எல்லாயிடங்களிலும் நடுவதற்கு முடியாவிட்டாலும், நட்ட மரங்களை பாதுகாக்க அரசாங்கம் கடுமையான சட்டம் கொண்டு வர முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சிலர் தவறான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். பொதுமக்களின் உதவியால்தான், ஒத்துழைப்பால் தான் அவற்றைத் தடுக்க முடியும்.

[1973 பிப்ரவரி 12

மால்கோ தொழிற்சாலை கழிவு நீர்

*133. வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலூகா நகர எல்லைக்குள் இருக்கும் மால்கோ தொழிற்சாலையில் கழிவு நீரைத் தடுத்து பாசனத்திற்கு பயன் படுத்தும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது?

(இ) இதைத் துரிதமாக செயல்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அத்தகையத் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், அது சம்பந்தமாக சர்வே செய்யப் பட்டு, எஸ்டிமேட் போடப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை அருகேயுள்ள தண்ணீர் இல்லாத நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்கு வசதியிருக்கிறது. ஏன் அதைச் செயல்படுத்தும் திட்டத்தை அரசு மேற்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மெட்ராஸ் அலுமினியம் ஆலைக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கும் ஒப்பந்த வாசகத்தின்படி கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, நீர்த்தேக்கத் திற்கு விட வேண்டும். அந்த ஒப்பந்தத்தில் இது ஒரு கண்டிஷனாக இருக்கிறது. அதன்படி இப்போது அவர்கள் அந்தத் தண்ணீரைச் சுத்தப்படுத்தி, நீர்த் தேக்கத்திற்கு அனுப்புவதால் அந்த நடவடிக்கை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

சுற்றுலா இடங்களைப் பற்றிய புத்தகங்கள்

*134. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்களையும் சிறப்புக்களையும் விளக்க புத்தகம் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புப் புத்தகங்கள் இருக்குமானால், வெளிநாட்டிலிருந்து இறங்குகிற பயணிகள் டெல்லியிலே வந்திறங்கும்போதோ, பம்பாயிலே வந்திறங்கும்போதோ அந்த நகரத்திலுள்ள விமான நிலையத்திலேயே தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் நாட்டிலுள்ள நீலகிரியின் எழில் பற்றியும், குற்றாலத்தைப் பற்றியும் உள்ள புத்தகங்களை அங்கேயே கொடுத்தால், அவர்கள் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்க வருவதற்கு ஆர்வம் ஏற்படுத்துவதாக இருக்கும். அதற்கான வழிவகை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் இப்போது தான் தயாராகிக் கொண்டு வருகின்றன. சுற்றுலா வாரியம் தற்போது பம்பாயிலே ஏர் இந்தியா கட்டடத்தில் ஒரு இடத்தை எடுத்து, விளம்பரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த புக்லெட்டு கள் நான்டிடேயில் போல் பெரிய அளவில் இல்லாமல், சிறிய சிறிய புத்தகங்களாக அளிக்கப்படுமா, அல்லது பெரிய அளவில் அளிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கைட் புத்தகங்கள் என்றாலே நான்டிடேயில் போல் பெரிய அளவில் இருக்காது. ஆனால் நான்டி டேயில் போல் சுவையானதாக இருக்கும். அந்த வகையில் சென்னை, மகாபலிபுரம், காஞ்சிபுரம் ஆகிய மூன்று இடங்களைக் குறித்து ஒரு புத்தகமும், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, இராமேஸ்வரம் ஆகிய நான்கு ஊர்களைக் குறித்து ஒரு புத்தகமும், தமிழ்நாட்டிலுள்ள மலை வாசஸ்தலங்களைக் குறித்து ஒரு புத்தகமும், சிறிய அளவில் அழகான வகையில் வெளியிடப்படவிருக்கின்றன. அவைகள் பயணிகள் விரைவில் படித்துப் பார்த்து சுவைப்பெறத்தக்க வகையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, அந்தப் புத்தகங் கள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது சுற்றுலா பயணிகளுக்கு கொடுப்பதற்காகத் தயாரிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் ஆர் வத்தைப் பார்க்கிறபோது அதை அளிக்கலாம் என்று நம்புகிறேன்.